<u>இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி</u>

(Calender of Events) மாவட்டத்தின் பெயர் : ஈரோடு மாவட்டம்

| வ. எண். | திருக்கோயிலின் பெயர் மற்றும் தல வரலாறு/ அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website & E,mail.id |
|---|---|---|---|---|---|---|
| 1. | **அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் – சென்னிமலை – பெருந்துறை வட்டம் – ஈரோடு மாவட்டம் – 638 051.** | | | | | |
| | <u>புராண வரலாறு</u><br>அனந்தன் என்ற நாகார்ஜுனனுக்கும், வாயு தேவனுக்கும் பலப்பரிட்சை நடந்தது. அனந்தன் மகாமேரு பருவதத்தை சுற்றிப்பிடித்துக் கொள்ள வாயு தேவன் கடுமையாக வீசி அனந்தன் பிடியிலிருந்து மேரு மலையை விடுவிக்க முயன்றார். அதுபோழ்து மேருவின் சிகரப்பகுதி முறிந்து பறந்து சென்று பூந்துறை நாட்டில் விழுந்தது. அச்சிகரப்பகுதியே சிரகிரி, சிகரகிரி, புஷ்பகிரி, மகுடகிரி, சென்னிமலை என்றும் வழங்கலாயிற்று.<br><br>**<u>சென்னிமலையாண்டவர் மூர்த்தியின் வரலாறு</u>**<br>சென்னிமலைக்கு சுமார் 3 மைல் தூரத்தில் நொய்யல் ஆற்றின் கரையில் கொடுமணல் என்ற ஒரு கிராமம் தற்சமயம் இருந்து வருகிறது. இது ஒரு காலத்தில் பெருநகரமாயும், ஒரு சிற்றரசுக்கு ஆட்பட்டதாயும் இருந்து வந்ததாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் பல சுவையான செய்திகள் அறிய ஆராய்ந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.<br><br>பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்நகரில் பண்ணையக்காரர் ஒருவருடைய பெரும் பண்ணையில் நூற்றுக்கணக்கான பசுமாடுகள் இருந்து வந்திருக்கிறது. அதில் ஒரு வளம்மிக்க காராம்பசுவும் இருந்தது. தினமும் பசுக்கள் மேய்ப்பவன் அடைத்து வைப்பது வழக்கம். சில நாட்களாக காராம் பசுவின் மடியில் பால் இல்லாமல் இருந்து வந்ததை வேலையாள் தன் பண்ணையாரிடம் தெரிவித்தான். பண்ணையாரும் பலநாட்கள் இதை கவனித்து வந்தபோது, தினசரி மாலையில் ஆவினங்கள் கூட்டமாக தொட்டிக்கு திரும்பி வரும்போது காராம் பசு மட்டும் பிரிந்து சற்று தூரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன் மடியில் உள்ள பால் முழுவதும் தானாகவே சொறியவிட்டு பின் மறுபடியும் மாடுகள் கூட்டத்தில் சேர்ந்து வருவதை சில நாட்கள் கவனித்து விட்டு, அந்த குறிப்பிட்ட இடத்தில் மண்ணை தோண்டி பார்க்கச் செய்தார். சுமார் 5 அல்லது 6 அடி ஆழம் தோண்டியதும், எல்லோரும் அதிசயிக்கத்தக்க பூர்ண முகப்பொழிவுடன் ஒரு கற்சிலை தென்பட்டது. பண்ணையார் புளங்காகிதம் அடைந்து தன்னை ஆட்கொண்ட இறைவனே வந்து விட்டதாகக் கூறிக்கொண்டு விக்ரஹத்தை எடுத்து அதன் முகப்பொழிவில் ஈடுபட்டு மெய்மறந்திருந்தார். பின் விக்ரஹத்தை ஆராய்ந்தபோது விக்ரஹத்தின் இடுப்பு வரை நல்ல வேலைப்பாட்டுடன் முகம் அதி அற்புதப் பொழிவுடன் இருக்க, இடுப்புக்குகீழ் பாதம் வரை சரியாக வேலைப்பாடில்லாமல் கரடுமுரடாக இருப்பதை அவர் ஒரு குறையாக எண்ணி அந்த பாகத்தையும் சிறந்த சிற்பியைக் கொண்டு உளியினால் வேலை துவங்கும் சமயம் அந்த இடத்தில் இரத்தம் பீறிட்டது. இதை கண்ணுற்ற எல்லோரும் பயந்து மேற்கொண்டு சுத்தம் செய்வதை நிறுத்திவிட்டார்கள்.<br><br>பண்ணையார் தன் அபசாரத்திற்கு வருந்தி ஆண்டவர் இப்படியே இருக்க பிரியப்படுகிறார் | **<u>பங்குனி மாதம்</u>**<br>**<u>பங்குனி உத்திர தேர் திருவிழா</u>**<br>**கொடியேற்றம்**<br><br>**திருக்கல்யாணம்**<br><br>**தேர் வடம் பிடித்தல் மற்றும் தேர் நிலை சேர்தல்**<br><br>**காலை பரிவேட்டை**<br>**இரவு தெப்போற்சவம்**<br><br>**காலை தரிசனம்**<br>**இரவு மஞ்சள்நீர் உற்சவம்** | பங்குனி 25–ம் நாள் (07.04.2017)<br>கொடியேற்றம்<br><br>பங்குனி 26–ம் நாள் (08.04.2017)<br>திருக்கல்யாணம்<br><br>பங்குனி 27–ம் நாள் (09.04.2017)<br>தேர் வடம் பிடித்தல் மற்றும் தேர்நிலை சேர்தல்<br><br>பங்குனி 28–ம் நாள் (10.04.2017)<br>பரிவேட்டை மற்றும் தெப்போற்சவம்<br><br>பங்குனி 29–ம் நாள் (11.04.2017)<br>தரிசனம் மற்றும் மஞ்சள்நீர் உற்சவம் | **<u>பங்குனி உத்திர தேர்த்திருவிழா</u>**<br><br>பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று ரதஉலா நடைபெறும். இத்திருவிழா 5 நாட்கள் கொண்டதாகும். கொடியேற்ற நாளிலிருந்து முதலாம் நாள் கொடியேற்ற நிகழ்வும், 2–ம் நாள் இரவு திருக்கல்யாணம், 3–ம் நாள் காலை திருத்தேர் வடம் பிடித்தல் மற்றும் மாலை தேர்நிலை சேர்தல் நிகழ்வும், 4–ம் நாள் காலை பரிவேட்டை மற்றும் இரவு தெப்போற்சவ நிகழ்வும், 5–ம் நாள் காலை தரிசனம் மற்றும் இரவு மஞ்சள் நீர் உற்சவம் பூர்த்தியுடனும் நிறைவடைகிறது. இந்நாட்களில் மூலவருக்கு அபிஷேகம் செய்தும் , சிறப்பு அலங்காரத்துடன் மூலவர் காட்சியளிப்பார். பல்வேறு ஊர்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதம் மேற்கொண்டும், நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டு வருகிறார்கள். விசேட நாட்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். | **<u>அலுவலகம்</u>**<br>**04294–250223**<br><br>**<u>மலைக்கோயில்</u>**<br>**04294–292595**<br>**04294 –292263** | **<u>WEBSITE</u>**<br>**www.chennimalaitemple.tnhrce.in**<br><br>**<u>E.Mail</u>**<br>**chennkovil@gmail.com** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | என்று மகிழ்ந்து பயபக்தியுடன் ஆராதனை செய்து பக்கத்திலுள்ள குன்றின்மேல் ஒரு சிறிய ஆலயம் எழுப்புவித்து இந்த சிலையை பிரதிஷ்டை செய்ததாயும், அதுவே சென்னிமலை மலையின் பேரில் தண்டாயுதபாணி மூர்த்தமாக ஆட்சிப் பீடத்தில் வீற்றிருப்பதாயும், சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனார்கள். அதன் சான்றாக அருள்மிகு தண்டாயுதபாணி மூர்த்தம் திருமுகம் பூரணப் பொழிவுடனும், இடுப்புக் கீழே வேலைப்பாடற்றும் இருப்பதை இன்றும் காணலாம்.<br><br>**<u>திருத்தலச் சிறப்புகள்</u>**<br>இத்திருக்கோயிலானது வரலாற்றுப் புகழ்பெற்ற பிரார்த்தனை சிறப்பு மிக்க மலைக்கோயிலாகும். தினசரி 6 கால பூஜை நடைபெற்று வருகிறது. திருக்கோயில் சன்னதி காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடை திறந்து பக்தர்கள் வழிபாட்டிற்கு தடையின்றி பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது. பக்தர்கள் மலைக்கோயிலுக்குச் செல்ல 1320 திருப்படிகள் கொண்ட படிவழி பாதையும், வாகனங்கள் மூலம் செல்ல 4 கிலோ மீட்டர் தூரமுள்ள தார்சாலை ஒன்றும் உள்ளது. மூலவர் தண்டாயுதபாணி கோலம் கொண்டு அருள்பாளித்து வருகிறார். மூலவர் செவ்வாய் அம்சமாகவும் இதர கிரகங்கள் கோஷ்டத்திலும் சிறப்புடன் அமைந்துள்ளது. ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் அரங்கேற்றிய சிறப்பும், அருணகிரிநாதரால் திருப்புகழில் பாடப் பெற்ற சிறப்பும், 18 சித்தர்களுள் ஒருவரான பின்நாக்கு சித்தர் வாழ்ந்து முக்தியடைந்த சிறப்பும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தானாகவே பொங்கி வழியும் மாமாங்க தீர்த்த சுனையினை தன்னகத்தே கொண்ட சிறப்பும், 12.2.1984 அன்று 1320 திருப்படிகள் வழியே இரட்டை மாட்டு வண்டி மலையேறிய அதிசயம் நடைபெற்ற திருத்தலமாகும்.<br><br>**<u>அமைவிடம்</u>**<br>ஈரோடு மாவட்டம், ஈரோட்டிலிருந்து தாராபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் 28–வது கிலோமீட்டரில் சென்னிமலை அமைந்துள்ளது. ஈங்கூர் புகை வண்டி நிலையத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் சென்னிமலை திருத்தலம் அமைந்துள்ளது. சென்னிமலை என்றால் தலைமையான மலை என்று பொருள். இது மேருவின் ஒரு பகுதி என்பது ஐதீகம். | | | | | |

## இணைப்பு படிவம்–1

## இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி

**(Calender of Events) மாவட்டத்தின் பெயர் : ஈரோடு மாவட்டம்**

**சென்னை ஆணையர் நே.மு.க.எண்.13631/இ.ச.அ (ம.தொ.) நாள்.18.03.2016**

| வ. எண். | திருக்கோயிலின் பெயர் மற்றும் தல வரலாறு/ அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website & E,mail.id |
|---|---|---|---|---|---|---|
| 1. | **அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் – சென்னிமலை – பெருந்துறை வட்டம் – ஈரோடு மாவட்டம் – 638 051.**<br><br>**புராண வரலாறு**<br>அனந்தன் என்ற நாகார்ஜுனனுக்கும், வாயு தேவனுக்கும் பலப்பரிட்சை நடந்தது. அனந்தன் மகாமேரு பருவதத்தை சுற்றிப்பிடித்துக் கொள்ள வாயு தேவன் கடுமையாக வீசி அனந்தன் பிடியிலிருந்து மேரு மலையை விடுவிக்க முயன்றார். அதுபோழ்து மேருவின் சிகரப்பகுதி முறிந்து பறந்து சென்று பூந்துறை நாட்டில் விழுந்தது. அச்சிகரப்பகுதியே சிரகிரி, சிகரகிரி, புஷ்பகிரி, மகுடகிரி, சென்னிமலை என்றும் வழங்கலாயிற்று.<br><br>**சென்னிமலையாண்டவர் மூர்த்தியின் வரலாறு**<br>சென்னிமலைக்கு சுமார் 3 மைல் தூரத்தில் நொய்யல் ஆற்றின் கரையில் கொடுமணல் என்ற ஒரு கிராமம் தற்சமயம் இருந்து வருகிறது. இது ஒரு காலத்தில் பெருநகரமாயும், ஒரு சிற்றரசுக்கு ஆட்பட்டதாயும் இருந்து வந்ததாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் பல சுவையான செய்திகள் அறிய ஆராய்ந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.<br><br>பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்நகரில் பண்ணையக்காரர் ஒருவருடைய பெரும் பண்ணையில் நூற்றுக்கணக்கான பசுமாடுகள் இருந்து வந்திருக்கிறது. அதில் ஒரு வளம்மிக்க காராம்பசுவும் இருந்தது. தினமும் பசுக்கள் மேய்ப்பவன் அடைத்து வைப்பது வழக்கம். சில நாட்களாக காராம் பசுவின் மடியில் பால் இல்லாமல் இருந்து வந்ததை வேலையாள் தன் பண்ணையாரிடம் தெரிவித்தான். பண்ணையாரும் பலநாட்கள் இதை கவனித்து வந்தபோது, தினசரி மாலையில் ஆவினங்கள் கூட்டமாக தொட்டிக்கு திரும்பி வரும்போது காராம் பசு மட்டும் பிரிந்து சற்று தூரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன் மடியில் உள்ள பால் முழுவதும் தானாகவே சொறியவிட்டு பின் மறுபடியும் மாடுகள் கூட்டத்தில் சேர்ந்து வருவதை சில நாட்கள் கவனித்து விட்டு, அந்த குறிப்பிட்ட இடத்தில் மண்ணை தோண்டி பார்க்கச் செய்தார். சுமார் 5 அல்லது 6 அடி ஆழம் தோண்டியதும், எல்லோரும் அதிசயிக்கத்தக்க பூர்ண முகப்பொழிவுடன் ஒரு கற்சிலை தென்பட்டது. பண்ணையார் புளாங்கிதம் அடைந்து தன்னை ஆட்கொண்ட இறைவனே வந்து விட்டதாகக் கூறிக்கொண்டு விக்ரஹத்தை எடுத்து அதன் முகப்பொழிவில் ஈடுபட்டு மெய்மறந்திருந்தார். பின் விக்ரஹத்தை ஆராய்ந்தபோது விக்ரஹத்தின் இடுப்பு வரை நல்ல வேலைப்பாட்டுடன் முகம் அதி அற்புதப் பொழிவுடன் இருக்க, இடுப்புக்குகீழ் பாதம் வரை சரியாக வேலைப்பாடில்லாமல் கரடுமுரடாக இருப்பதை அவர் ஒரு குறையாக எண்ணி அந்த பாகத்தையும் சிறந்த சிற்பியைக் கொண்டு உளியினால் வேலை துவங்கும் சமயம் அந்த இடத்தில் இரத்தம் பீறிட்டது. இதை கண்ணுற்ற எல்லோரும் பயந்து மேற்கொண்டு சுத்தம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். | **சித்திரை – சித்திரை விஷு,** | **சித்திரை 1–ம் நாள்**<br>**(14.04.2017) வெள்ளிக்கிழமை** | அதிகாலை 4.00 மணிக்கு சிறப்பு ஹோமத்துடன், சிறப்பு அபிஷேகம் செய்து காலை 6.00 மணிக்கு சிறப்பு அலங்கார பூஜை நடைபெறும். இந்நாள் தமிழர்களின் தமிழ் புத்தாண்டு தினமாக கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் பக்தர்கள் அதிகளவில் வந்து தரிசனம் செய்து செல்வார்கள். அன்றைய தினம் முழுவதும் மூலவர் சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளிப்பார். | **அலுவலகம்**<br>**04294–250223**<br><br>**மலைக்கோயில்**<br>**04294–292595**<br>**04294 –292263** | **WEBSITE**<br>**www.chennimalaitemple.tnhrce.in**<br><br>**E.Mail**<br>**chennkovil@gmail.com** |
| | | **சித்திரை – சித்ரா பௌர்ணமி** | **சித்திரை 27–ம் நாள்**<br>**(10.05.2017) புதன்கிழமை** | பிற்பகல் 3.00 மணிக்கு மூலவருக்கு சந்தன அபிஷேகம் செய்து திருமேனி முழுவதும் சந்தன அலங்காரம் செய்து சிறப்பு பூஜை மாலை 5.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் பக்தர்கள் வழிபாட்டிற்கென இரவு 11.00 மணி வரை சன்னதி நடை திறந்திருக்கும். மேற்படி அலங்கார பூஜைக்கு பின்னர் மூலவருக்கு அர்ச்சனைகள் கிடையாது. உற்சவருக்கு மட்டுமே அர்ச்சனை செய்யப்படும். பக்தர்கள் யாவரும் உடல் முழுவதும் சந்தனம் பூசியும், தங்களது இல்லத்திலிருந்து பல்சுவை உணவுகள் கொண்டு வந்து நிலவொளியில் அருந்தி மகிழ்ந்தும் செல்வார்கள். | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பண்ணையார் தன் அபசாரத்திற்கு வருந்தி ஆண்டவர் இப்படியே இருக்க பிரியப்படுகிறார் என்று மகிழ்ந்து பயபக்தியுடன் ஆராதனை செய்து பக்கத்திலுள்ள குன்றின்மேல் ஒரு சிறிய ஆலயம் எழுப்புவித்து இந்த சிலையை பிரதிஷ்டை செய்ததாயும், அதுவே சென்னிமலை மலையின் பேரில் தண்டாயுதபாணி மூர்த்தமாக ஆட்சிப் பீடத்தில் வீற்றிருப்பதாயும், சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனார்கள். அதன் சான்றாக அருள்மிகு தண்டாயுதபாணி மூர்த்தம் திருமுகம் பூரணப் பொழிவுடனும், இடுப்புக் கீழே வேலைப்பாடற்றும் இருப்பதை இன்றும் காணலாம்.<br><br>**<u>திருத்தலச் சிறப்புகள்</u>**<br>இத்திருக்கோயிலானது வரலாற்றுப் புகழ்பெற்ற பிரார்த்தனை சிறப்பு மிக்க மலைக்கோயிலாகும். தினசரி 6 கால பூஜை நடைபெற்று வருகிறது. திருக்கோயில் சன்னதி காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடை திறந்து பக்தர்கள் வழிபாட்டிற்கு தடையின்றி பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது. பக்தர்கள் மலைக்கோயிலுக்குச் செல்ல 1320 திருப்படிகள் கொண்ட படிவழி பாதையும், வாகனங்கள் மூலம் செல்ல 4 கிலோ மீட்டர் தூரமுள்ள தார்சாலை ஒன்றும் உள்ளது. மூலவர் தண்டாயுதபாணி கோலம் கொண்டு அருள்பாளித்து வருகிறார். மூலவர் செவ்வாய் அம்சமாகவும் இதர கிரகங்கள் கோஷ்டத்திலும் சிறப்புடன் அமைந்துள்ளது. ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் அரங்கேற்றிய சிறப்பும், அருணகிரிநாதரால் திருப்புகழில் பாடப் பெற்ற சிறப்பும், 18 சித்தர்களுள் ஒருவரான பின்நாக்கு சித்தர் வாழ்ந்து முக்தியடைந்த சிறப்பும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தானாகவே பொங்கி வழியும் மாமாங்க தீர்த்த சுனையினை தன்னகத்தே கொண்ட சிறப்பும், 12.2.1984 அன்று 1320 திருப்படிகள் வழியே இரட்டை மாட்டு வண்டி மலையேறிய அதிசயம் நடைபெற்ற திருத்தலமாகும்.<br><br>**<u>அமைவிடம்</u>**<br>ஈரோடு மாவட்டம், ஈரோட்டிலிருந்து தாராபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் 28–வது கிலோமீட்டரில் சென்னிமலை அமைந்துள்ளது. ஈங்கூர் புகை வண்டி நிலையத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் சென்னிமலை திருத்தலம் அமைந்துள்ளது. சென்னிமலை என்றால் தலைமையான மலை என்று பொருள். இது மேருவின் ஒரு பகுதி என்பது ஐதீகம். | | | | | |